சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08

ந.க.எண். 6545/அ4/2022 நாள். 07 .10.2022

பொருள் : சென்னை மாவட்டம் 2022-23 ஆம் கல்வியாண்டு - அரசு / சென்னை/ஆதி திராவிட நல / அரசு உதவி பெறும் நடுநிலை / உயர் / மேல் நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு போதைப் பொருள் மற்றும் மது ஒழிப்பு தொடர்பான போட்டி நடத்துதல் - சார்பு

பார்வை சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித ந.க.எண் ம5/23094/2022 நாள்.. 07.09.2022

.......................

பார்வையில் காண், சென்னை மாவட்ட ஆட்சியரின் கடிதத்தின்படி, மேற்காண் பொருள் சார்ந்து 2022-23 ஆம் கல்வியாண்டிற்கான அரசு/சென்னை/ ஆதிநல/ அரசு உதவி பெறும் நடுநிலை/ உயர்/ மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு போதைப் பொருள் மற்றும் மது ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும், பாடப்புத்தகங்களைத் தாண்டி சமூக சிந்தனைகளை உருவாக்கும் விதமாகவும், புதிய மற்றும் மாறுபட்ட கோணத்தில் எதிர்காலத்தில் மதுவில்லா உலகை உருவாக்க சிந்திக்க வைக்கவும் மது ஒழிப்புக்கான பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி ஆகியவற்றை கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு 6 முதல் 8 ஆம் வகுப்பு , 9-10 ஆம் வகுப்பு மற்றும் 11-12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு என தனித்தனியாக மூன்று நிலைகளில் பள்ளி அளவில் மற்றும் வருவாய் மாவட்ட அளவில் நடத்தப்படவுள்ளது.

பள்ளி அளவில் மற்றும் வருவாய் மாவட்ட அளவில் போட்டியில் ஒவ்வொரு நிலையிலும் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு ரொக்க பரிசும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படவுள்ளது. போட்டியில் பங்கேற்கும் அனைத்து மாணவர்களுக்கும் பங்கேற்பு சான்றிதழும் வழங்கப்படும்.

எனவே பள்ளி அளவில் இப்போட்டியை நடத்தி ஒவ்வொரு போட்டியிலும் முதலிடம் பெறும் மாணவர்களை தேர்ந்தெடுத்து வருவாய் மாவட்ட அளவில் நடைபெறும் போட்டியில் பங்கேற்க ஏதுவாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் பெயர் பட்டியலை முதன்மைக் கல்வி அலுவலகத்தில் 11.10.2022 அன்று மாலை 4.00 மணிக்குள் சமர்ப்பிக்குமாறு தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

போட்டி நடைபெறும் விவரம்.

| வ.எண் | போட்டியின் நிலைகள் | போட்டி மற்றும் கால அளவு | போட்டி நடைபெறும் நாள் |
|---|---|---|---|
| 1 | பள்ளி அளவில் | 1. கட்டுரை போட்டி - 60 நிமிடம் ( 4 பக்கங்களுக்கு மிகாமல்)<br>2. பேச்சுப் போட்டி - 3 நிமிடம்<br>3. ஓவியப் போட்டி -90 நிமிடம் (Full Chart) | 11.10.2022 |
| 2 | மாவட்ட அளவில் | | 14.10.2022 |

மது விலக்கு, போதை ஒழிப்பு - விழிப்புணர்வு போட்டிகள்

போட்டிக்கான தலைப்பு

| வ.எண் | போட்டி | வகுப்பு 6 -8 | வகுப்பு 9 & 10 | வகுப்பு 11 & 12 |
|---|---|---|---|---|
| 1 | கட்டுரைப் போட்டி | போதை அழிவின் பாதை | போதை இல்லாப் புதிய உலகம் படைப்போம் | குடிப்பழக்கம் வீட்டிற்கும் நாட்டிற்கும் கேடு |
| 2 | பேச்சுப் போட்டி | குடிப்பழக்கத்தின் தீமைகள் | குடிப்பழக்கம் ஒழித்து குடும்பம் காப்போம் | போதைப் பொருள் பயன்பாடும் சமூகச் சீர்கேடும் |
| 3 | ஓவியப் போட்டி | மது பழக்கம் - தீய பழக்கம் | குடி, போதைப் பொருள் - சமுதாயக் கேடு | போதை இல்லா புது உலகம் படைப்போம்/ |

பள்ளி அளவில் நடைபெறும் போட்டியினை புகைப்படத்துடன் கூடிய விவரத்தினை முதன்மைக் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

- வருவாய் மாவட்ட அளவிலான போட்டி பரிசு விவரம்

| வ.எண் | போட்டி | முதல் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு |
|---|---|---|---|---|
| 1 | கட்டுரைப்போட்டி | 1000 | 750 | 500 |
| 2 | பேச்சுப் போட்டி | 1000 | 750 | 500 |
| 3 | ஓவியப் போட்டி | 1000 | 750 | 500 |

வருவாய் மாவட்ட அளவிலான போட்டி 14.10.2022 அன்று காலை 9.30 மணி அளவில் முதன்மைக் கல்வி வளாகத்தில் நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்

சென்னை

பெறுநர்

தலைமையாசிரியர்கள், அரசு / சென்னை/ஆதி திராவிட நடுநிலை உயர்/மேல்நிலைப் பள்ளிகள், சென்னை மாவட்டம்

நகல்

1. மாவட்ட ஆட்சியர் சென்னை மாவட்டம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. துணை ஆணையர் (கல்வி) சென்னை மாநகராட்சி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது
3. கல்வி அலுவலர், சென்னை மாநகராட்சி அவர்களுக்கு தொடர் நடவடிக்கைக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது
4. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் அவர்களுக்கு தொடர் நடவடிக்கைகக்காக அனுப்பப்படுகிறது
5. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள் அவர்களுக்கு தொடர் நடவடிக்கைகக்காக அனுப்பப்படுகிறது
6. அனைத்து மண்டல மேற்பார்வையாளர்கள் தொடர் நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது.